# புகழ்ச்சிக்கூட்டநற்செய்தி

2017 புரட்டாதி மாதம் 04ம் திகதி முதல் புரட்டாதி மாதம் 10ம் திகதி வரை

***"இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்."***

(புனித மத்தேயு 5:7)

01. புகழ்ச்சிக்கான நோக்கு

- மகோன்னத இறைவன் மிகவும் இரக்கமுடையவர். சேய்நன்றி அறியாதவர்களுக்கும், துஷ்டர்களுக்கும் அவர் இரக்கமுள்ளவர். அவர் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் அவரது சூரிய ஒளியை உருவாக்கிக் தருபவர். நீதிமான்களுக்கும் பாவிகளுக்கும் மழை பொழியச் செய்கிறார். இவ்வாறு மகா இரக்கமுடைய கருணை மிகுந்த அப்பா தந்தைக்கு நாம் முழு உள்ளத்துடன் நன்றி கூறுவோம். புகழ்வோம்.
- புபுது பாடல் இல 217 'ஆண்டவரே எனது நல்லாயன்…"

02. கடந்த வாரத்தில் நீங்கள் பெற்ற அனுபவத்தை சிறி குழுக்களில் பகிர்ந்து கொள்ளவும்.

03. வாரத்திற்கான நற்செய்தி புனித லூக்கா 6:32-36 வரை வாசிக்கவும்.

i. இரக்கத்தின் பரம முன்மாதிரிகையாக இயேசு ஆண்டவர் எமக்குக் காட்டுவது அப்பா தந்தையே. "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்." என்று ஆண்டவர் கூறுகின்றார்.

ii. தந்தையானவர் பரிசுத்தமானவர். ஆகையால் அவரது இரக்கம் வித்தியாசமானது. மனித இரக்கத்தை விட வித்தியாசமானது. அது எல்லையற்றது. பரந்துவிரிந்தது. அவர் அனைவரையும் ஒரே விதமாக கவனிக்கிறார். இரக்கம் காட்டுகிறார்.

iii. தந்தையானவரின் இரக்கம் குறித்து நீங்கள் அறிந்ததையும் நீங்கள் அனுபவித்ததையும் அருகிலிருப்பவருடன் பகிரவும்

iv. சாதாரன மனிதர்கள் தனக்கு அன்பு காட்டுபவருக்கே அன்பு காட்டுவர் தனக்கு நன்மை செய்பவர்களுக்கே நன்மை செய்வர் "பாவிகளும் அவ்வாறு செய்கிறார்கள்" ஆண்டவர் கூறுகின்றார்.

v. கிறிஸ்தவ இரக்கம் காட்டுதல் என்பது அதனின்று மேம்பட்டு போவதாக இருக்க வேண்டும் என ஆண்டவர் கூறுகின்றார். "உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள்" (புனித லூக்கா 6:35)

vi. ஆண்டவர் கூறுவது போன்று இரக்கமாயிருப்பவர்களுக்கு கிடைக்கும் கைமாறு மிக உயர்ந்தது. "நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள்" (புனித லூக்கா 6:35) நாம் இறை புத்திரத்தன்மைக்கு உயர்த்தபடுவது எமக்கு கிடைக்கக்கூடிய உத்தமமான பரிசாகும். இறை இரக்கத்தின் உத்தம அனுபவமாகும்.

vii. இவ்வாறு பார்க்கையில் "இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்." என்பது கிறிஸ்தவ சீடன் இவ்வுலகில் பெறும் அனுபவமாகும்.

04. எம் பக்கம்.

- இறை நோக்கின்படி நீங்கள் இரக்கம் காட்டுபவரா என நினைத்துப் பாருங்கள். நீங்கள் இரக்கம் காட்டுவது உங்களுக்கு இரக்கம் காட்டுபவருக்கு மாத்திரமா? உங்களுக்கு துரோகம் செய்பவருக்கு, உங்களுக்கு இரக்கம் காட்டாதவருக்கு உங்களில் பொறாமைப் படுபவருக்கு, உங்களை இழிவாக நடத்துபவருக்கு நீங்கள் இரக்கம் காட்டுகிறீர்களா?"

05. இவ்வாரம் முழுவதும் முதல் நடவடிக்கையாக எமக்கு துரோகம் செய்பவர்களுக்காக மன்றாடுவோம்.

    - இரக்கம் பெற வேண்டியவர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்கு இரக்கம் காட்ட முன்வருவோம். உதவி உபகாரம் பெற வேண்டியவர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்கு உதவி உபகாரம் செய்ய நடவடிக்கை எடுப்போம்.
    - புபுது பாடல் இல 150 "இறைவன் இல்லாத பூவுலகம்…….." பாடலைப் பாடியவாறு இறுதி புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்